பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
25 06 2025  6 30
புதன்கிழமை  மாலை

<u>மாநிலச் செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

- அவசர நிலை பிரகடனத்தின் போது அதற்கு எதிராக துணிச்சலுடன் போராடியவர்களின் தியாகங்களை நினைவுகூரும் வகையிலும் கவுரவிக்கும் வகையிலும் மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

- அவசர நிலை அமல்படுத்தப்பட்டது ஜனநாயகத்தின் இருண்ட அத்தியாயம் என்று தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறியுள்ளார்.

- ரயில் கட்டணங்களை மத்திய அரசு உயர்த்தக்கூடாது என முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் கோரியுள்ளார்.

- தமிழகத்தில் மாம்பழ விலை வீழ்ச்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவிடுமாறு மத்திய அரசை வலியுறுத்தியுள்ளதாக மாநில அமைச்சர் திரு சக்கரபாணி கூறியுள்ளார்.

- 17 வயதிற்குட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா 2 தங்கம், 2 வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

அவசர நிலை பிரகடனத்தின் போது அதற்கு எதிராக துணிச்சலுடன் போராடியவர்களின் தியாகங்களை நினைவுகூரும் வகையிலும் கவுரவிக்கும் வகையிலும் மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் இதனைத் தெரிவித்தார்.

1975 ஆம் ஆண்டு இதே நாளில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்ட போது அதற்கு எதிராக போராடியவர்களின் ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்டு கற்பனை செய்ய முடியாத கொடுமைகளுக்கு ஆளானவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் அமைச்சரவைக் கூட்டத்தில் 2 நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் வரலாற்றில் அவசர நிலை பிரகடனம் என்பது மறக்க முடியாத அத்தியாயம் என்றும் அவர் கூறினார்.

இதனை கருத்தில் கொண்டே இந்நாள் அரசியல் சாசன படுகொலை தினமாக கடைபிடிக்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கிடையே, அவசர நிலை பிரகடனத்தின்போது ஜனநாயகத்தை ஆதரித்தவர்கள் கொடுமைப்படுத்தப்பட்டதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ஆகாஷ்வாணியில் ஒலிபரப்பான மக்களிடையே மனந்திறந்து பேசும் மன்கி பாத் நிகழ்ச்சியில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - மோடி- 32 செகண்ட்ஸ்)

இந்நிலையில், அவசர நிலை அமல்படுத்தப்பட்டது ஜனநாயகத்தின் இருண்ட அத்தியாயம் என்று தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், அந்த காலக் கட்டத்தில் அடிப்படை உரிமைகள் நிறுத்திவைக்கப்பட்டதாகவும், பத்திரிகை சுதந்திரம் பறிக்கப்பட்டதாகவும், அரசியல் அமைப்பு சட்டம் சீர்குலைக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயகத்தின் நசுக்கப்பட்ட ஒரு காலத்தை இன்று நாம் நினைவு கூர்வதாகவும் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.

அவசர நிலை காலத்தில் 21 மாத நெருக்கடி நிலை இருந்ததாக பிஜேபி மகளிரணி தலைவர் திருமதி வானதி சீனிவாசன் கூறியுள்ளார்.

இன்று கோவையில் நடைபெற்ற அவசர நிலை கால அடக்குமுறைகள் குறித்த கண்காட்சி மற்றும் கருத்தரங்கில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

ஒரு குடும்பத்திடம் மட்டுமே அதிகாரம் இருக்க வேண்டும் என்ற நோக்கில் காங்கிரஸ் செயல்பட்டு வருவதாக அவர் குறை கூறினார்.

அவசர நிலை காலத்தில் கொடுமைகளை அனுபவித்த திமுகவினர் தற்போது காங்கிரஸ் கட்சியிடம் கூட்டணி வைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அவசர நிலையை பிறப்பித்ததற்காக காங்கிரஸ் இதுவரை மன்னிப்பு கோரவில்லை என்றும் திருமதி வானதி சீனிவாசன் கூறினார்.

>><><><<

ரயில் கட்டணங்களை மத்திய அரசு உயர்த்தக்கூடாது என முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கோரிக்கையை விடுத்துள்ள அவர், குளிர்சாதன வசதி கொண்ட பெட்டிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்பதற்காக சாதாரண பெட்டிகளின் எண்ணிக்கையை குறைக்கக்கூடாது என்று வலியுறுத்தியுள்ளார்.

>><><><<

தமிழகத்தில் மாம்பழ விலை வீழ்ச்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவிடுமாறு மத்திய அரசை வலியுறுத்தியுள்ளதாக மாநில அமைச்சர் திரு சக்கரபாணி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகானை சந்தித்து இக்கோரிக்கையை வலியுறுத்திய பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

(சவுண்ட் பைட் - சக்கரபாணி – 51 செகண்ட்ஸ்)

>><><><<

திருச்சி மாவட்டம் துறையூர் மற்றும் அதனைச்சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களின் நீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படுவதாக மாநில அமைச்சர் திரு கே என் நேரு கூறியுள்ளார்.

இன்று துறையூரில் 108 கோடி ரூபாய் மதிப்பிலான இத்திட்டப் பணிகளை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

இப்பகுதியில் உள்ள பேருந்து நிலையம் 11 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்படவுள்ளதாகவும், அதற்கான பணிகள் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

>><><><<

அஇஅதிமுக மாவட்ட செயலாளர்கள் கூட்டம் இரண்டாவது நாளாக இன்றும் சென்னையில் நடைபெற்றது.

அக்கட்சியின் பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

>><><><<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 3 நாட்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதற்கிடையே காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் கனமழை காரணமாக, ஒகேனக்கல் காவிரியாற்றில் நீர்வரத்து 18 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - தண்டபாணி - 30 செகண்ட்ஸ்)

>><><><<

நெல்லை மாஞ்சோலையில் மத்திய குழுவினர் இன்று ஆய்வு மேற்கொண்டனர்.

இந்தக்குழு அதன் அறிக்கையை உச்சநீதிமன்றத்தில் விரைவில் சமர்ப்பிக்கவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - திருமலை – 49 செகண்ட்ஸ்)

>><><><<

மாவட்டச் செய்திகள்

மதுரை மாவட்ட ஆட்சியராக திரு பிரவீன் குமாரும், திருச்சி மாவட்ட ஆட்சியராக திரு சரவணனும், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியராக திருமதி சினேகாவும், நெல்லை மாநகராட்சியின் ஆணையராக திருமதி மோனிகா ரானாவும் இன்று பொறுப்பேற்றுக் கொண்டனர்.

-----------

தூத்துக்குடியில் போதைப் பொருள் விற்பனை செய்த 4 பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

-------------

திண்டுக்கல் மாவட்டம் சின்னமுலையூரில் கால்நடைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம் இன்று நடைபெற்றது.

>><><><><<

விளையாட்டுச் செய்திகள்

17 வயதிற்குட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா 2 தங்கம், 2 வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

வியட்நாமில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 46 கிலோ எடைப்பிரிவில் ரித்துஜாவும், 69 கிலோ எடைப்பிரிவில் மணிஷாவும் தங்கப்பதக்கம் வென்றனர்.

40 கிலோ எடைப்பிரிவில் Cheshta வும் 61 கிலோ எடைப்பிரிவில் Tina Punia வும் வெள்ளிப் பதக்கம் வென்றனர்.

53 கிலோ எடைப்பிரிவில் Saarika வெண்கலப்பதக்கம் வென்றார்.

----------------

Aurionpro சர்வதேச செஸ் போட்டியில் இந்தியாவின் லலித் பாபு பட்டம் வென்றார்.

----------------

ஆசிய ஸ்னூக்கர் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Paras Gupta இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

>>End of News<<